(உ) 1966-67-ம் ஆண்டிலும், 1967-68-ம் ஆண்டிலும் வேளாண்மைத் துறையால் விற்கப்பட்ட சில முக்கியமான பூச்சிக் கொல்லி மருந்துகளின் விலைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

தொடர் எண்ணும், மருந்தின் பெயரும். (1)		1966-67-ல் ஏற்றுக்கொள்ளப் [illegible] பட்ட விலை வீதம். (2) ரூ.		1967-68-ல் ஏற்றுக்கொள் [illegible] ளப்பட்ட விலை வீதம். (3) ரூ.	
1 பி. எச்.சி. 10 சதவீதம்	டன் ஒன்று	360	00	370	00
2 டி.டி.டி. 5 சதவீதம்.	,,	510	00	455	00
3 டி.டி.டி. 50 சதவீதம்.	,,	5,049	00	5,100	00
4 தாமிரஆக்கி குளோரைடு	,,	9,800	00	9,650	00
5 துத்தநாகபாஸ்பைடு.	கிலோ ஒன்று	10	50	9	80
6 இதைல் பராத்தியான் 50 சதவீதம் இ.சி.	லிட்டர் ஒன்று	29	80	33	48

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, விவசாய இலாக்கா மூலம் விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடிய பூச்சி கொல்லி மருந்து தகுந்த டெண்டர்கள் போட்டு விலைக்கு வாங்கி கொடுக்கப்படுகிறதா ? மகாராஷ்ட்ராவில் விலை குறைவாக இருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே இந்த விலை வித்தியாசத்தைக் குறைத்து விவசாயிகளுக்குக் கொடுக்கும் வகையில் முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தலைவரவர்களே, டெண்டர்கள் மூலமாகத்தான் செய்யப்படுகிறது. தகுதியான மருந்தாகவும், குறைவானதாகவும் பார்த்து அதை விவசாய டைரக்டர் அவர்கள் வாங்குகிறார்கள். இதைத் தேர்ந்தெடுப்பதில் எந்தவிதமான குறைபாடும் இருப்பதாக ஒன்றும் தகவல் இல்லை.

THIRU V. K. RAMASWAMY MUDALIYAR : Is there any proposal before the Government to give subsidy to the supply o these pesticides ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படி ஒன்றும் குறைப்பதாக உத்தேசமில்லை. ஏற்கெனவே உணவு தானியங்களுக்கு 25 சதவிகிதமும், கமர்சியல் க்ராப்ஸ், அதாவது வியாபாரப் பொருட்களுக்கு 50 சதவிகிதமும் ஆக இருந்ததை இப்போது இரண்டிற்கும் சமமாக 35 சதவிகிதம் என்று வைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்திற்கு இதனால் கூடுதலாக 10 லட்சம் ரூபாய் சென்ற ஆண்டில் கிடைத்திருக்கிறது.

THIRUMATHI LAKSHMI KRISHNAMURTHY : Sir, is there any arrangement to test the potency and efficacy of these pesticides, because several of them are being marketed by several commercial firms and the small farmer has not had the facility to test out the effectiveness of all these pesticides ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பரிசீலனை செய்துதான் அது எடுத்துக் கொள்ளப் படுகிறது.

Kanyakumari District Co-operative Supply and Marketing Society.

"165 *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether the attention of the Madras Government has been invited to the fact of mis-appropriation of funds in connection with the construction of a rice mill in the Co-operative Supply and Marketing Society in Kanyakumari district ; and

(*b*) if so, the action taken theron ?

கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கம்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு வினியோக விற்பனைச் சங்கத்தில் (Co-operative Supply and Marketing Society) அரிசி ஆலை கட்டுவதில் ஊழல் கையாடல் நடப்பதைக் குறித்துத் தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதா ?

(இ) ஆமெனில் , அதன் மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) இந்த அரிசி ஆலை கட்டுவதற்குரிய செலவை விட அதிகமாகவும் விபரங்களின்றியும் செலவிட்ட தொகையை அதற்குக் காரணமானவர்களிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவரவர்களே, அப்படி அதிகமாக செலவு செய்யப்பட்ட தொகை எவ்வளவு ? அதை யார் யாரிடமிருந்து வசூலிக்க உத்தரவு போடப்பட்டு இருக்கிறது ? என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தலைவரவர்களே, அந்தக் கட்டிடம் கட்ட முன் அனுமதி வாங்கப்பட்டது. அந்த முன் அனுமதியில் இவ்வளவு தொகைக்கு வாங்கவேண்டுமென்று போடப்பட்டு, அதற்கு மேலும் தொகை செலவழிக்கப்பட்டு இருக்கிறது. அது ஒரு குற்றச்சாட்டு. அதற்கு யார் பொறுப்பாளி என்பதைக் கண்டு பிடித்து அதற்கு நடவடிக்கை எடுக்கச் சொல்லி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது போடப்பட்டிருக்கும் தொகை அவர்கள் செலவழித்த தொகைக்குச் சரியாக இருக்கிறதா என்று அஸிஸ்டெண்ட் எஞ்சினீயர், கூட்டுறவு இலாகாவில் பணியாற்றுபவர் மூலமாக விசாரிக்கப்பட்டு அவர்கள் இன்றைக்கு எவ்வளவு செலவழித்து இருக்கிறார்களோ, எவ்வளவு பெறும் என்று கணக்குப் போட்டு பார்த்து 3,565·63 ரூபாய் அதிகமாகச் செலவழித்திருக்கிறார்கள் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அந்தத் தொகைக்கு யார் யார் பொறுப்பாளி என்பதைக் கண்டுபிடித்து அவர்களிடமிருந்து வசூலிக்க சொல்லப்பட்டிருக்கிறது.

Peoples' Co-operative Bank, Nagercoil

*166 *Q.*—THIRU M. SANKARALINGAM PILLAI : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether any complaint has been received in March last regarding the frauds committed by the Sectretary, Peoples' Co-operative Bank at Nagercoil in the past few years ; and

(*b*) if so, the action taken thereon ?

நாகர்கோவில் பீப்பிள்ஸ் கூட்டுறவு வங்கி

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நாகர்கோவில் பீப்பிள்ஸ் கூட்டுறவு வங்கியின் காரியதரிசி கடந்த சில வருடங்களாக வங்கியில் செய்து வரும் ஊழல்கள் பற்றி சென்ற மார்ச் மாதத்தில் ஏதாவது புகார் வந்ததா ?

(இ) ஆமெனில், அதன்மேல் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) ஆம்.

(இ) இந்த வங்கியின் செயல் முறைகளைப் பற்றி விசாரிக்கப்பட்டது. வங்கிக்குச் சேர வேண்டிய காலங்கடந்த பாக்கிகளை வசூலிப்பதற்கு உடனே நடவடிக்கை எடுக்கும்படி நாகர் கோவில் உதவிப்பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டது.